# ஜீவிக்கும் வழியா அல்லது சட்டவாத வழியா?

Translated from the original article, 'The living way or the legal way'

By *DeVern Fromke*

இந்த மாநாட்டில் நாம் ஒரு குறிப்பிட்ட கட்டத்துக்கு வந்திருக்கிறோம்; இந்தக் கட்டத்தில் நாம் மூன்று காரியங்களில் ஒன்றைச் செய்ய வேண்டியிருக்கும். ஒன்று, "முடியாது" என்று கதறுவோம் அல்லது ஏமாற்றத்தில் இடிந்துபோய் "இது மிகவும் கடினம்" என்று கூறுவோம் அல்லது வழி ஏற்படுத்திக்கொண்டு முன்னேபோய் ஆவியானவரின் ஜீவனுக்குள் நுழைவோம். கர்த்தருடைய மக்களின் பல்வேறு கூட்டங்களை நீங்கள் பார்க்கும்போது, தங்கள் வாழ்க்கையின் ஆவிக்குரிய கூர்மையின் இரகசியத்தைக் கற்றுக்கொண்ட மக்கள் சிலரைப் பார்ப்பீர்கள். கர்த்தரை உண்மையாகவே நேசிப்பதாகச் சொல்லுகிற மக்கள் நிறையப்பேர் இருக்கிறார்கள்; ஆனாலும், அவர்களுக்கிடையேகூட ஆவிக்குரிய தொய்வின் ஒரு போக்கு அல்லது கைவிடப்பட்ட ஒரு போக்கு இருக்கிறது. இன்று காலையில் நான் உங்களுடன் ஒரு கோட்பாட்டைப் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்; அது நாம் நம் ஆவிக்குரிய வாழ்க்கையை ஒரு கூர்மையான, கூர்விளிம்புடன் வாழ உதவிசெய்யும் என்று நான் விசுவாசிக்கிறேன்.

முதலாவது, நான் பில்லி என்ற ஒரு சிறுவனைப்பற்றிய ஒரு கதையைச் சொல்ல விரும்புகிறேன். ஒருநாள் காலையில் அவனுடைய அம்மா வெளியே போக ஆயத்தமாகிக்கொண்டிருந்தாள். வெளியே போவதற்குமுன், அவள் தன் மகனைப் பார்த்து, "பில்லி, நான் கொஞ்சம் சாக்கலேட் செய்திருக்கிறேன். அது கெட்டியானபிறகு நீ அதை வெட்டிச் சாப்பிடலாம். ஆனால், இன்றிரவு நான் ஒரு விருந்துக்குச் செல்லவிருக்கிறேன். எனவே, அந்த விருந்துக்குக் கொண்டுசெல்ல 24 துண்டுகளை வைத்துவிட்டு மீதியை நீ சாப்பிடலாம்," என்று கூறினாள். கடைசியாக, வெட்டிச் சாப்பிடக்கூடிய அளவுக்கு அது கெட்டியாகிவிட்டது. பில்லி பெரிய பெரிய துண்டுகளாக வெட்டிச் சாப்பிட ஆரம்பித்தான். சாப்பிட்டான், சாப்பிட்டான், சாப்பிட்டுக்கொண்டேயிருந்தான். திடீரென்று மீதியிருந்த துண்டுகளை எண்ண ஆரம்பித்தான். 20 துண்டுகள் மட்டுமே இருந்தன. "இவைகளை நான் இப்படிப் பெரிய பெரிய துண்டுகளாக வெட்டினது நல்லதாப் போச்சு. ஒவ்வொரு பெரிய துண்டையும் நான் இப்போது இரண்டாக வெட்டினால் 40 துண்டுகள் வரும். அப்படியானால் நான் இன்னும் 16 துண்டுகளைச் சாப்பிடலாம். அம்மாவுக்கு 24 துண்டுகள்தானே வேண்டும்," என்று எண்ண ஆரம்பித்தான். 40 துண்டுகளாக வெட்டி 16 துண்டுகளைச் சாப்பிட்டுமுடித்தபிறகு, தட்டிலே மிகக் கொஞ்சமாக இருப்பதுபோல் தோன்றியது. எனவே, இருந்த சின்னத் துண்டுகளைத் தட்டிலே பரப்பி வைக்க ஆரம்பித்தான். அம்மா திரும்பிவந்தபோது, பில்லி 'அம்மா சொன்னதை நிறைவேற்றிவிட்டேன்' என்ற நம்பிக்கையில் இளைப்பாறுதலோடு இருந்தான். 24 துண்டுகள் இருக்க வேண்டும் என்று அம்மா சொல்லியிருந்தார். அங்கு இப்போது 24 துண்டுகள் இருந்தன. அம்மா ஏதாவது சொல்லுவார்களா என்று எதிர்பார்த்து, பில்லி சாயங்காலம் முழுவதும் அம்மாவையே பார்த்துக்கொண்டிருந்தான். அன்றிரவு, அவனுடைய அம்மா சாக்கலேட்டை எடுத்துக்கொண்டு விருந்துக்குச் செல்லவிருந்தபோது, அவன் கண்ணீருடன் அவளிடம் ஓடி, "அம்மா, என் மனச்சாட்சி என்னைக் குற்றப்படுத்தவில்லை; ஆனால், நான் மிகவும் சுயநலவாதி என்று எனக்குள் ஆழத்தில் ஏதோவொன்று சொல்லுகிறது," என்று கூறினான்.

இந்தக் கதையைப் பின்புலமாக வைத்துக்கொண்டு, நாம் இப்போது 1 கொரிந்தியர் 8ஆம் அதிகாரத்துக்குத் திரும்புவோம். அங்கு நாம் ஒரு வகையான கிறிஸ்தவர்களைப் பார்க்கிறோம்; "எங்கள் மனச்சாட்சி எங்களைத் தொந்தரவுசெய்யவில்லை," என்ற நிலைமையில் வாழ்வதில் இவர்கள் திருப்தியாக இருக்கிறார்கள். பரிசுத்த ஆவியானவரின் உணர்வுகளைக் கூர்மையாக அறிந்து வாழ்கிற நிலைமைக்கு இவர்கள் மிகவும் அபூர்வமாகவே செல்கிறார்கள். இப்படி இருப்பவர்கள் அநேகம். எனவே, கொரிந்து சபையில் இருந்த பிரச்சினையை நாம் கொஞ்சம் ஆழமாகப் பார்ப்போம். அங்கு சில இளம் விசுவாசிகள் இருந்தார்கள்; அவர்கள், "கோவிலில் விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட மாம்சத்தைப் புசிக்கக்கூடாது," என்று கூறினார்கள். அவர்கள் இந்த விக்கிரகங்களை ஒரு நிஜம் என்று கருதினார்கள்; எனவே, தவறாகப் பயிற்றுவிக்கப்பட்ட அவர்களுடைய மனச்சாட்சி அவர்களைத் தொந்தரவுசெய்தது. அங்கு இன்னொரு வகையான கிறிஸ்தவர்கள் இருந்தார்கள்; அவர்களிடம் இதைப்பற்றிய அதிகமான அறிவு இருந்தது; ஆனால், அவர்கள் மிகவும் சுயநலவாதிகளாக இருந்தார்கள். "உலகத்திலே விக்கிரகமானது ஒன்றுமில்லை; எனவே, நாம் இந்த மாம்சத்தைப் புசிக்க விரும்பினால், அதற்கு நமக்குச் சுதந்திரம்

உம் டு," என்று இந்தப் பழைய கிறிஸ்தவர்கள் கூறினார்கள். இவ்வாறு, நாம் இங்கு இருசாராருக் கிடையே ஒரு முரண்பாட்டைப் பார்க்கிறோம்; ஒரு சாரார் ஏறக்குறைய அறியாமையுடையவர்கள்; இன்னொரு சாரார் ஏறக்குறைய சுயநலவாதிகள். இங்கு, இது ஒருவேளை விக்கிரகங்களுக்குப் படைக் கப்பட்ட மாம்சத்தோடு இடைப்படுகிற ஒரு பிரச்சினையாக இருக்கக்கூடும். ஆனால், இந்தக் கோட்பாடு சபையின் எல்லாப் பழக்கவழக்கங்களுக்கும் பொருந்தும்.

மக்கள் மூன்று மட்டங்களில் வாழ முடியும் என்பதை நாம் பார்க்க வேண்டும். கீழ்மட்டத்தில் வாழ்கிற மக்கள் எப்போதும் உடைத்துக்கொண்டு வர விரும்புகிறார்கள்; அவர்களுக்கு எப்போதும் சட்டம் வேண்டும்; அதாவது அவர்களைத் *தடைசெய்கிற* ஏதாவது அவர்களுக்கு வேண்டும். அதன்பின், இடை மட்டத்தில் வாழ்கிறவர்கள் இருக்கிறார்கள்; 'இது *சட்டபூர்வமானது*' என்று அவர்களுடைய மனச்சாட்சி சொல்லுகிற எல்லாவற்றையும் அவர்கள் நிறைவேற்றுகிறார்கள். அதன்பின் '*தகுதியான*' மட்டத் தில் வாழ்கிறவர்கள் இருக்கிறார்கள். இது என்னவென்று நாம் பார்ப்போம்.

கொரிந்துவில் இருந்த இந்தப் பிரச்சினையோடு பவுல் எப்படி இடைப் படுகிறார்? "நீங்கள் இன்னின்ன காரியங்களைச் செய்யலாம். இன்னின்ன காரியங்களைச் செய்யக்கூடாது," என்ற சட்டங்கள்கொம் ட ஒரு சிறிய புத்தகத்தை பவுல் எழுத வேண்டும் என்று சிலர் எதிர்பார்த்தார்கள். இவர்களே கீழ்மட் டத்தில் வாழ்கிறவர்கள். ஆனால், அறியாமையுள்ள இந்தப் பலவீனமான விசுவாசிகளுக்கும், சுயநல வாதிகளான மற்ற விசுவாசிகளுக்கும் பவுல் எழுதுகிறார். இந்த அதிகாரத்தில் முதல் வசனத்தில் அவர் என்ன சொல்லுகிறார் என்று நாம் பார்ப்போம்: "*விக்கிரகங்களுக்கும் படைக்கம்பட்டவைகளைக்குறித்த விஷயத்தில், நம்மெல்லாருக்கும் அறிவு உண்டென்று நமக்குத் தெரியுமே. அறிவு இறுமாப்பை உண் டாக்கும். அன்போ கட்டியெழுப்பும்.*" மனம் பிடித்துக்கொள்ளக்கூடிய ஓர் அறிவு உண்டு. அதுதான் இந்த அறிவு; 'இறுமாப்பை' உண்டாக்குகிற அறிவு. ஆனால், நிறைவான உள்ளான அறிவு என்று ஒன்று உண்டு. இப்போது நாம் அதைப் பார்க்கப்போகிறோம். பலவீனமான இந்த விசுவாசிகளிடம் இந்தப் புறம்பான அறிவு இருந்தது. அவர்கள் தேவனைப்பற்றிய சில காரியங்களை அறிந்திருந்தார்கள்; ஆனால், அவர்கள் விக்கிரகங்களை இன்னும் ஒரு பொருளாகக் கருதினார்கள். உலகத்திலே விக்கிரக மானது ஒன்றுமில்லை என்ற நிறைவான, உள்ளான அறிவு இன்னொரு சாராரிடம் இருந்தது. "*ஆகிலும், இந்த அறிவு எல்லாரிடத்திலும் இல்லை, சிலர் இன்றைவரைக்கும் விக்கிரகத்தை ஒரு பொருளென்று எண்ணி, விக்கிரகத்துக்குப் படைக்கப்பட்டதைப் புசிக்கிறார்கள்; அவர்களுடைய மனச்சாட்சி பலவீன மாயிருப்பதால் அசுசிப்படுகிறது,*" என்று 7ஆம் வசனத்தில் பவுல் கூறுகிறார். 'உங்களிடம் நிறைவான அறிவு இருக்கிறது என்பதும், இந்த மாம்சத்தைப் புசிக்க உங்களுக்குச் சுதந்திரம் உண்டென்பதும் உம் மைதான்' என்று பவுல் கூறுவதுபோல் தோன்றினாலும், அவர் இப்போது என்ன கூறுகிறார் என் பதைக் கவனியுங்கள். "நான் *என்* சுதந்திரத்தைப் பயன்படுத்தி, இடைப்பட்ட 'சட்டபூர்வமான' மட்டத் தில் வாழவில்லை. நான் என் சுதந்திரத்தைப் பயன்படுத்த முடியும். ஆனால், நான் அப்படிச் செய்யா மல், நான் இன்னொரு மட்டத்திற்கு முன்னேறிச் செல்கிறேன்; அந்த மட்டத்தில் நான் *அவருடைய* அன்பின் அடிமை," என்று அவர் கூறுவதுபோல் தோன்றுகிறது.

மக்கள்மேல் கட்டுப்பாடுகளைத் திணிக்கிற சட்டபூர்வமான வழியை பவுல் அவர்களுக்குப் போதிக்க வில்லை; மாறாக, அன்பின் ஜீவிக்கும் வழியை அவர் அவர்களுக்குப் போதிக்கிறார் என்பதைக் கவனி யுங்கள். அவர்களில் சிலரிடம் உள்ளான அறிவு இருந்தது; இருந்தபோதும், அவர்கள் இந்த வெளிப்பாட் டைத் தங்களுடைய சொந்த சுயநலத்துக்காகப் பயன்படுத்திக்கொண்டிருந்தார்கள் என்பதை உங்க ளால் பார்க்க முடிகிறதா? "ஆ! எங்களிடம் வெளிப்பாடு இருக்கிறது. உலகத்தில் விக்கிரகமானது ஒன் றும் இல்லை. எனவே, நாங்கள் இந்த மாம்சத்தைப் புசிக்கலாம்," என்று அவர்கள் கூறினார்கள். ஒருவன் இந்த முறையில் பேசினால், அவன்தான் இன்னும் அவனுடைய சிறிய உலகத்தின் மையம்; அவன் எல்லா நல்ல காரியங்களையும் தனக்குச் சாதகமாகவே பயன்படுத்திக்கொள்ளுகிறான். அங்கு இருந்த சூழ்நிலையை பவுல் 13ஆம் வசனத்தில் சுருக்கமாகக் கூறுகிறார்: "*ஆதலால் போஜனம் என் சகோதர னுக்கு இடறலும் டாக்கினால், நான் என் சகோதரனுக்கு இடறலும் டாக்காதபடிக்கு, என்றைக்கும் மாம்சம் புசியாதிருப்பேன்.*" 'இப்டிப்பட்ட போதனை மக்களை அடிமைத்தனத்துக்குள் கொண்டு செல்கிறது,' என்று மக்கள் எப்போதும் சொல்லுகிறார்கள். ஆனால், கலகக்கார மனதின் அடிமைத்தன மும் இருக்கிறது; அதே நேரத்தில், அன்பின் அற்புதமான அடிமைத்தனமும் இருக்கிறது.

இப்போது நாம் 9ஆம் அதிகாரத்துக்குச் சென்று, இதே கோட்பாடு அங்கும் செயல்படுவதைப் பார்ப் போம். இந்த மக்களால் அப்போஸ்தலனாகிய பவுலின் விநோதமான, ஊற்றம்பட்ட வாழ்க்கையைம் புரிந்துகொள்ள முடியவில்லை. "*என்னை நியாயம் விசாரிக்கிறவர்களுக்கு நான் சொல்லுகிற மாறுத்தார மாவது,*" என்று 3ஆம் வசனத்தில் பவுல் கூறுகிறார். கர்த்தருடைய ஊழியக்காரன் என்ற முறையில் தனக்கு உரிமைகள் உண்டு என்று அவர் சுருக்கமாகக் கூறுகிறார். இதைத் தொடர்ந்து, தனக்கு மூன்று உரிமைகள் இருக்கின்றன என்று அவர் கூறுகிறார். 'மற்றவர்களைப்போல சாதாரணமாக உணவைச் சாப்பிட எனக்கு உரிமை உண்டு,' என்று 4ஆம் வசனத்தில் அவர் கூறுகிறார். 'சாதாரணமாக உறவுகள் கொள்ளவும், ஒரு குடும்பத்தை வைத்திருக்கவும், பிள்ளைகளைப் பெறவும் எனக்கு உரிமை உண்டு,' என்று 5ஆம் வசனத்தில் அவர் கூறுகிறார். 'கர்த்தருடைய ஊழியக்காரன் என்ற முறையில் சாதா ரணமாக ஊதியம் பெற எனக்கு உரிமை உண்டு,' என்று அவர் 6ஆம் வசனத்தில் தொடர்ந்து கூறு கிறார். இதைத் தொடர்ந்து இவைகள் தன்னுடைய உரிமைகள் என்று நிரூபிக்கிறார். "இவைகளை மனு ஷர் வழக்கத்தின்படி சொல்லுகிறேனோ? நியாயப்பிரமாணமும் இவைகளைச் சொல்லுகிற தில்லையோ?" என்று 8ஆம் வசனத்தில் அவர் கூறுகிறார். "போரடிக்கிற மாட்டை வாய்கட்டாயாக என்று மோசேயின் பிரமாணத்திலே எழுதியிருக்கிறதே, தேவன் மாடுகளுக்காகவே கவலையாயிருக்கிறாரா?" என்று 9ஆம் வசனம் கூறுகிறது. களத்தில் தானியங்களைப் போரடித்துக்கொண்டிருக்கும் மாடுகளைப் பாருங்கள்! போரடிக்கிற இந்த மாடுகளின் வாயைக் கட்டுவதற்கு அவர்கள் அனுமதிக்கப்படவில்லை. ஏன்? ஏனென்றால், அவைகள் போரடித்துக்கொண்டிருக்கையில், குனிந்து சில தானியங்களைச் சாப்பிட லாம். தேவன் மாடுகளுக்கு மட்டும்தான் உரிமைகளைக் கொடுக்கிறாரா அல்லது அவர் கர்த்தருடைய ஊழியக்காரனுக்கும் உரிமைகளைக் கொடுக்கிறாரா? கர்த்தருடைய மற்ற ஊழியக்காரர்கள் அவர் களுடைய உரிமைகளைப் பயன்படுத்தினால், அதே சிலாக்கியம் பவுலுக்கு இல்லையா?

ஆனால், பவுல் இம்போது ஒரு குண்டைத் தூக்கிப்போடுகிறார். 12ஆம் வசனத்தில அவர் என்ன சொல்லுகிறார் என்பதைக் கவனியுங்கள்: "*மற்றவர்கள் உங்களிடத்தில் இந்த அதிகாரத்தைச் செலுத் தினால், அவர்களிலும் நாங்கள் அதிகமாய்ச் செலுத்தலாமல்லவா? கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு யாதொரு தடையும் உண்டாகதபடிக்கு, நாங்கள் இந்த அதிகாரத்தைச் செலுத்தாமல் எல்லாப் பாடும் படுகிறோம்.*"

"நான் *என்* உரிமைகளைக் கோரி, இந்த "சட்டபூர்வமான" மட்டத்தில் நான் வாழவில்லை. மாறாக, நான் இதைத் தாண்டி "தகுதியான" மட்டத்திற்குச் சென்றுவிட்டேன்; இங்கு நான் அவருக்கு என் மேலுள்ள உரிமைகளைம்பற்றி மட்டுமே அக்கறைம்படுகிறேன்," என்று 9ஆம் அதிகாரத்தில் பவுல் கூறு கிறார். தனக்கு உரிமைகள் உண்டு என்று அவர் ஆணித்தரமாக நிரூபிக்கிறார். "*அந்தப்படியே சுவி சேஷத்தை அறிவிக்கிறவர்களுக்கு சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாக வேண்டுமென்று கர்த்தரும் கட்டளையிட்டிருக்கிறார்,*" என்று 14ஆம் வசனத்தில் அவர் கூறுகிறார். "அப்படியிருந்தும், நான் இவை களில் ஒன்றையும் அநுபவிக்கவில்லை; இப்படி நடக்கவேண்டுமென்று இவைகளை நான் எழுதுகிறது மில்லை," என்று 15ஆம் வசனத்தில் அவர் தொடர்ந்து கூறுகிறார்.

பழைய ஏற்பாட்டில் இரண்டு வகையான வேலைக்காரர்கள் இருந்தார்கள் என்பதை நாம் பார்க்க வேண்டும். சில வேலைக்காரர்கள் கூலிக்கு அமர்த்தப்பட்டார்கள்; அவர்களுக்கு சில உரிமைகள் இருந் தன; அவர்களுக்குத் தவறு இழைக்கப்பட்டால் நீதி கேட்டுச் செல்வதற்கான சில போக்கிடங்களும் இருந்தன. இன்னொரு வகையான வேலைக்காரனும் இருந்தான். அவன் கொத்தடிமை; அவனுக்கு எந்த உரிமைகளும் கிடையாது; எந்தச் சம்பளமும் கிடையாது; அவனுக்குத் தவறு இழைக்கம்பட்டால் அவன் ம்தி கேட்டுச் செல்வதற்கு எந்தப் போக்கிடமும் கிடையாது. எபிரேய மக்கள் தங்கள் சொந்த மக் களை இப்படிக் கொத்தடிமைகளாக்க ஒருபோதும் அனுமதிக்கப்படவில்லை. ஆனால், அவர்கள் போய், மற்ற தேசங்களைக் கைப்பற்றி, அந்தத் தேசத்தின் மக்களைக் கொத்தடிமைகளாக்கலாம். ஆண்டவ ராகிய இயேசு தம் பரலோக உரிமைகளையெல்லாம் ஒதுக்கிவைத்து விட்டு, ஒரு கொத்தடிமை யாகப் பூமிக்கு வந்தார்; இது என்னே அற்புதம்! அப்போஸ்தலனாகிய பவுலும் அதே கிரேக்க வார்த்தை யையே 19ஆம் வசனத்தில் பயன்படுத்துகிறார்: "நான் ஒருவனுக்கும் அடிமைப்படாதவனாயிருந்தும், நான் அதிக ஜனங்களை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு, என்னைத்தானே எல்லாருக்கும் அடிமை யாக்கினேன்."

நாம் ஒருவரோடொருவர் உரையாடிக்கொண்டிருக்கும்போது, “என் உரிமைகள் எனக்குத் தெரியும்,” என்று மக்கள் அடிக்கடி சொல்வதை நீங்கள் கேட்டிருக்கிறீர்களா? ‘சட்டபூர்வமான’ மட்டத்தில் மக்கள் ‘*என்* சுதந்திரத்தில்’ அல்லது ‘*என்* உரிமைகளில்’ வாழும்போது, அவர்களுடைய மனச்சாட்சியால் அவர் களை ஒன்றும் செய்ய முடியாது. ஒரு கணம், ஒரு மரத்தையும் அதின் கனிகளையும் பாருங்கள். மரத்தின் கனிகள் நான் செய்கிற காரியங்கள். நான் செய்வது தவறு என்று எனக்குச் சுட்டிக்காட்ட மனச்சாட்சி சற்று உயர்ந்த மட்டத்தில் வேலை செய்கிறது. ஆனால், அதனால் மண்ணுக்குக் கீழே சென்று மரத்தின் வேர்களைப் பார்க்க முடியாது. இது பரிசுத்த ஆவியானவரின் வேலை; நான் என்ன *செய்கிறேன்* என்று எனக்குக் காண்பிப்பதைவிட, நான் என்னவாக *இருக்கிறேன்* என்று எனக்குக் காண்பிப்பதே பரிசுத்த ஆவியானவரின் வேலை. சில கொரிந்தியர்களின் மனச்சாட்சி பலவீனமாக இருந்தது என்று பவுல் கூறுகிறார்; ஏனென்றால், அவர்கள் புறம்பான மனதால் மட்டுமே வாழ்ந்தார்கள். ஆனால், பரிசுத்த ஆவியானவர் என் மனச்சாட்சியின் அருகே வந்து வேலைசெய்து, அதைப் பிரகாசிக் கும்போது, என்னிடம் நல்ல மனச்சாட்சி இருக்கிறது; அது உள்ளான பார்த்தலை அல்லது உள்ளான வெளிப்பாட்டை ஆதாரமாகக்கொண்டு வேலைசெய்கிறது. “என் மனச்சாட்சி என்னைத் தொந்தரவு செய்யவில்லை; என் சுதந்திரம் எனக்குத் தெரியும். என் உரிமைகள் எனக்குத் தெரியும்,” என்று சொல்லு கிற மக்கள் இன்று அநேகர் இருக்கிறார்கள். அவர்கள்தான் அவர்களுடைய சிறிய உலகத்தின் மையம்; அவர்கள் எல்லாவற்றையும் தங்களோடுதான் தொடர்புபடுத்திப்பார்ப்பார்கள். ஆனால், நாம் உடைத்துக்கொண்டு அதைவிட உயர்ந்த மட்டத்துக்குள் நுழைந்தால், அங்கு தேவன்தான் மையம்; அங்கு எல்லாம் அவரோடு தொடர்புடையனவாக இருக்கின்றன; அப்போது நாம் கேட்க விரும்புகிற கேள்விகள்கூட வித்தியாசமாக இருக்கின்றன.

ஒரு நாள், ஒரு கூட்டத்தில் நான் இந்த வகையில் பேசி முடித்தபிறகு, வேதாகமக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த ஒரு மாணவி என்னிடம் வந்தாள். வந்து, “நான் இன்னின்ன இடங்களுக்குப் போவது சரிதான் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? நான் இதைச் செய்வது சரியா? நான் அதைச் செய்வது சரியா? நான் இதை உடுத்தலாமா? நான் அதை உடுத்தலாமா?” என்று கேட்டாள். நான் ஒன்றும் சொல்லாமல், அங்கே சும்மா நின்றுகொண்டு சிரித்துக்கொண்டிருந்தேன். அவள் மேலே நோக்கிம் பார்த்து, “என் கேள்விகளில் என்ன தவறு?” என்று கேட்டாள். உடனே நான், “நான் இந்த நாள் *முழுவதையும்* வீணாக்கிவிட்டேனோ? நீ என்னிடத்தில் கேட்கும் கேள்விகள் நீ எந்த மட்டத்தில் வாழ்ந்துகொண் டிருக்கிறாய் என்பதைக் காண்பிக்கின்றன. இதை உன்னால் பார்க்க முடிகிறதா? ம்தான் மையமாக இருக்கிறாய் என்பதையும், எல்லாவற்றையும் நீ உன்னோடுதான் தொடர்புபடுத்துகிறாய் என்பதையும் உன்னால் பார்க்க முடிகிறதா?” என்று கேட்டேன். கண்ணீர் வழிந்தோட அவள் அந்த இடத்தைவிட்டுக் கடந்துசென்றாள்.

இதற்கான காரணத்தை நாம் 10ஆம் அதிகாரத்தில் பார்ப்போம். இங்கு நிறைய காரியங்கள் இருக் கின்றன; ஆனால், நாம் 23ஆம் வசனத்தில் தொடங்குவோம். “எல்லாவற்றையும்” என்று பவுல் கூறும் போது, அவர் மாம்சத்தைப் புசிப்பதைப்பற்றியும், ‘என் சுதந்திரத்தைப்’பற்றியும் ‘என் உரிமைகளைப்’ பற்றியும் பேசுகிறார் என்பதைத் தயவுசெய்து கவனியுங்கள். இவையெல்லாம் இங்கு இந்த இடஅமைப் பில் இருக்கின்றன. சில காரியங்கள் வேதவாக்கியங்களில் திட்டவட்டமாகத் தடைசெய்யப்பட்டுள்ளன. ஆனால், இந்த வசனத்தில் அவர், “இந்த மாம்சம் புசித்தலும், என் உரிமைகளும் அனுமதிக்கப்பட்டிருக் கின்றன, அவைகளை அநுபவிக்க சட்டம் அனுமதிக்கிறது. ஆனால், அவை தகுதியானவையல்ல. அவைகளெல்லாம் சட்டபூர்வமானவை. ஆனால், அவை என் ஆவிக்குரிய வாழ்க்கையைக் கட்டியெழுப் பாது. ஒவ்வொருவனும் தன் சுயபிரயோஜனத்தைத் தேடாமல், பிறனுடைய பிரயோஜனத்தைத் தேடக் கடவன்,” என்று கூறுகிறார். எனவே, அவர், “நான் என் சுதந்திரத்தில், என் உரிமைகளுக்காக அல்லது என் ஆதாயத்திற்காக நான் வாழவில்லை; மாறாக, *அவர்* என்னை ஆதாயம்பண்ணுவதிலேயே நான் பிரதானமான அக்கறைம்படுகிறேன்.” என்று கூறுகிறார். அவர் எல்லாவற்றையும் எப்படி தேவனோடு தொடர்புபடுத்துகிறார் என்று 31ஆம் வசனம் கூறுகிறது: “ஆகையால் நீங்கள் புசித்தாலும் குடித்தாலும், எதைச் செய்தாலும், *எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்காகச் செய்யுங்கள்.” “நான் என் சுயபிரயோஜனத்தைத் (அல்லது ஆதாயத் தைத்) தேடாமல், அநேகருடைய பிரயோஜனத்தைத் தேடி, அவர்கள் இரட்சிக்கப்படும்படிக்கு, எவ்விதத்திலும் எல்லாருக்கும் பிரியமாய் நடக்கிறதுபோல,”* என்று 33ஆம் வசனத்தில் அவர் கூறுகிறார்.

வெறுமனே தங்கள் சுதந்திரத்தையும், தங்கள் உரிமைகளையும், சுவிசேஷத்தினால் வரும் ஆதாயத்தையும் அனுபவிப்பதிலேயே மக்கள் பெரும்பாலும் தங்கிவிடுகிறார்கள். நான் இதைப் பார்க்கும்போது என் இருதயம் அவர்களை நாடிச் செல்கிறது. நாம் சட்டவாதிகளாக இருந்தால், “என் மனச்சாட்சி என்னைத் தொந்தரவு செய்யவில்லை,” என்று சொல்வோம். ஆனால், இது ஆத்துமாவில் உள்ள மனதின் மேல் மட்டுமே வேலை செய்கிற மனச்சாட்சி. பரிசுத்த ஆவியானவரின் உணர்வுகளை உணரக்கூடிய பிரகாசிப்பிக்கப்பட்ட மனச்சாட்சி, ‘ஏதோவொன்று தவறு’ என்று உள்ளே இருக்கிற குறுகுறும்பை உணரும் என்று நான் விசுவாசிக்கிறேன். இந்த உயர்ந்த மட்டத்தில், மனச்சாட்சி உள்ளான பிரமாணமாகிய ஜீவனுடைய ஆவியின் பிரமாணத்தின்மேல் வேலைசெய்கிறது. சில சபைகளில் ஆவிக்குரிய எழுப்புதல் ஏற்பட்ட சமயங்களில் நான் அங்கு இருந்திருக்கிறேன். மக்கள் உம் மையாகவே தங் களை ஒப்புக்கொடுத்தார்கள். அடுத்த வருடம் நான் அங்கு போகும்போது, அவர்கள் கர்த்தருக்கென்று இன்னும் அதிகமான கனிகொடுத்து கர்த்தருக்குள் வளர்ந்திருப்பார்கள் என்று நான் எதிர்பார்த்தேன். ஆனால், அவர்களுடைய ஆவிக்குரிய கூர்மை போய்விட்டது என்பதை முதல் கூட்டத்திலேயே நான் உணர்ந்துகொண்டேன். பரிசுத்த ஆவியானவரின் கண்டித்துணர்த்தும் வல்லமை தங்கள் மத்தியிலே ஏன் இல்லை என்று அவர்கள் வியந்தார்கள். ஆண்டவராகிய இயேசுவின் நெருக்குகிற அன்பு உண்மையாகவே அவர்களை இறுக்கிப்பிடிக்கவில்லை. தேவனுடைய ஆசீர்வாதத்தின் வாய்க்காலாக இரும்பதற்குப்பதிலாக, அவ ருடைய ஆசீர்வாதத்தைப் பெறுவதில் திருப்தியடைந்து அதில் தங்கிவிட்டார்கள். என் வாழ்க்கையில் எப்போதெல்லாம் அந்த ஆவிக்குரிய கூர்மை போய்விட்டதுபோல் தோன்றியதோ, அப்போதெல்லாம் பரிசுத்த ஆவியானவர், “நீ வெறுமனே ‘சட்டப்பிரகாரமான மட்டத்தில்’ தங்கி விட்டாய்,” என்று சுட்டிக்காட்டியிருப்பதை நான் கண்டிருக்கிறேன்.

ம்ங்கள் இந்த உயர்ந்த மட்டத்திற்கு செல்ல வேண்டும் என்று ஒருவரும் உங்களிடம் ஒருபோதும் கோருவதில்லை. இது எவ்வளவு அற்புதம்! “*என்னைத்தானே* எல்லாருக்கும் அடிமையாக்கினேன்,” என்று பவுல் கூறுகிறார். அவர் இதை உண்மையான மகிழ்ச்சியுடன் சொல்லுகிறார் என்று நான் நினைக்கிறேன். கர்த்தருக்குரிய ஏதோவொன்றை நாம் உண்மையாகவே பார்த்தால் மட்டுமே, நம் முழு ஆள்தத்துவமும் அவருடைய இருதயத்தைத் திரும்திசெய்ய நாடி ஓடும். பல வேளைகளில் நான் வெறுமனே கோரிக்கைகளை மட்டும் நிறைவேற்றுகிற பில்லியைப்போல் இருந்திருக்கிறேன் என்று நினைக்கிறேன். “அதோ, அங்கு 24 துண்டுகள் இருக்கின்றன. என் இஷ்டப்படி சாப்பிட எனக்குச் சுதந்திரம் உண்டு என்று என் அம்மா கூறினார். எனக்கு உரிமைகள் இருக்கின்றன. நான் என் ஆதாயத்தை அனுபவிக்கிறேன்,” என்று என்னால் கூற முடியும். ஆனால், நான் என் உதடுகளால் பேசிக் கொண்டிருந்த எல்லா நேரமும், வேறு ஏதோவொன்று எனக்குள் ஆழத்தில் பேசிக்கொண்டிருந்தது. மரத்தின் வேர்களைத் திரைநீக்கிக்காண்பிக்கிற பரிசுத்த ஆவியானவர் எப்போதும், “கொடு, கொடு,” என்று கூறுகிறார்.

நாம் நம் சபைக்குத் திரும்பிச் செல்லும்போது அல்லது நாம் ஐக்கியம் கொண்டிருக்கும் மக்களிடம் திரும்பிச் செல்லும்போது, இது நம்மில் ஜீவிக்கும் ஒரு கோட்பாடாக மாறும் என்று நான் நம்புகிறேன். ஜீவிக்கும் வழியே நிஜமான மகிழ்ச்சியின் வழியாகும். சட்டபூர்வமான வழி எல்லா நேரமும் உள்ளாகப் புண்படுத்துகிற வழியாகும்; ஏனென்றால், தேவன் எதிர்பார்க்கிற நிறைவுக்கென்று நாம் வாழவில்லையென்று நமக்குத் தெரியும்.